IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 48/2025 - PW-9

| | |
|---|---|
| Name | திரு. தங்க குருநாதன் |
| Husband/Father Name | பாஸ்கரன் |
| Village /Area | வத்திராயிருப்பு |
| Taluk | விருதுநகர் |
| Occupation | ஆய்வாளர் |
| Age | 46 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.06.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலை நகர குற்ற பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 02.11.2024 அன்று காலை 9.00 மணிக்கு புகார் மனுதாரராகிய புஷ்பலதா என்பவர் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.551/2024 U/s.294(b), 118(i), 109, 351(3) BNS ப்படி வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் நாராயணசாமி எனக்கு விசாரணைக்கு வைத்த வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகளான பரமேஸ்வர், வினோத் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு சாட்சிகளான புஷ்பலதா, லட்சுமி, வடிவேல், வினோத், பரமேஸ்வர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரி வெங்கடேசனை 02.11.2024 ம் தேதி 14.00 மணிக்கு அரக்கோணம் ராம்கோ மேம்பாலம் அருகே மணிமுத்து தெருவில் வைத்து கைது செய்து அவர் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தேன். பிறகு சாட்சிகள் மகேந்திரன், ராஜா ஆகியோர் முன்னிலையில் எதிரி வெங்கடேசன் எந்த வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலோ இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 14.15 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு சரவணனை கொலை வெட்ட பயன்படுத்திய இரும்பு கத்தியை தன் இடுப்பின் பின்பகுதியில் இருந்து எடுத்து ஆஜர் செய்ததை 15.15 மணிக்கு கைப்பற்றினேன். எதிரியிடமிருந்து கைப்பற்றிய கறி வெட்டும் கத்தியை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம்

காண்பிக்கப்படும் கத்தியை தான் ஆஜர் எதிரி என் முன்னிலையில் ஆஜர் படுத்தினார். அது **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 16.00 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து மகேந்திரமன் மற்றும் ராஜாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம்–91 மூலம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு 20.11.2024 ம் தேதி காயம்பட்ட சரவணன் மற்றும் காயம்பட்ட சரவணனுக்கு சிகிச்சை அளித்த திரு.அரவிந்த் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் சரவணனுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினார். பின்பு வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் நாராயணசாமியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணயை முடித்து எதிரியின் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

இந்த வழக்கில் காயம்பட்டவருக்கு கொடுங்காயம் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் கொடூரமான ஆயுதம் பயன்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிரிக்கும் காயம்பட்ட நபருக்கும் முன்விரோதம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மாதிரி வரைப்படத்தில் காட்டப்பட்டுள் அக்கம் பக்கத்து வீட்டுகாரர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ராஜா என்பவரது குடும்பத்தாரை விசாரித்துள்ளேன். அவருடைய மனைவி தான் லட்சுமி. காயம்பட்ட சரவணன் தனக்கு ஏற்பட்ட காயம் யாரால் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

அ.சா.1 புஷ்பலதா எதிரியும் உறவினர்கள் என்றும் அ.சா.1 க்கு எதிரியின் மீது இருந்த காழ்புணர்ச்சி காரணமாக கொடுத்த பொய்யான புகாரில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் தன்னிச்சையாக ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.06.22 16:36:50 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.